

# பனிமயம்

ஜூலை 2021

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





## பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

ஜுலை மாதம் நம் திருத்தலத்துக்கு ஒரு சிறப்பான மாதமல்லவா! இம்மாதம் **25**ஆம் தேதி கொடிப் பவனியும், **26**ஆம் நாள் கொடியேற்றமும், தொடர்ந்து பனிமயத்தாயின் திருவிழா நிகழ்வுகளும் வழக்கமாக சிறப்பாக நடைபெறும். ஆனால், கொரோனா இரண்டாம் அலையின் காரணமாக பொது வழிபாடுகள் இல்லாத இந்நாள்களில் பனிமயத் தாயின் பெருவிழா இந்த ஆண்டு எப்படிக் கொண்டாடப்படும் என நாம் அனைவருமே ஆவலோடும் கவலையோடும் காத்திருக்கிறோம்.

கவலைப்பட்டுக் காலத்தைக் கடத்தாமல், ஆண்டவரை நோக்கி நம் உள்ளங்களை உயர்த்துவோமாக. கடந்த இரண்டு ஆண்டுகளிலும் நமது பேராலயத்திலும், அன்பியங்களிலும் நடைபெற்ற **30** நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு பல ஆசிர்வாதங்களைப் பெற்றுத் தந்ததை நாம் மறக்க இயலாது.

இந்த ஆண்டும் பெருவிழாவுக்கு ஆயத்தமாக **30** நாள் தொடர் பரிந்துரை ஆராதனை **25.06.2021** அன்று நமது பங்கில் தொடங்கிவிட்டது. "மனிதர் விரும்புவதாலோ, உழைப்பதாலோ எதுவும் ஆவதில்லை. கடவுள் இரக்கம் காட்டுவதாலேயே எல்லாம் ஆகிறது" (உரோ 9:16) என்னும் இறைமொழியை உணர்ந்து, கடவுளின் இரக்கத்திற்காக உருக்கமுடன் மன்றாடுவோமாக.

தொடக்கத் திருச்சபையினர் இணைந்து இறைவேண்டல் செய்து பெற்றுக்கொண்ட ஆசிர்வாதங்களைப் பற்றித் திருத்தூதர் பணிகள் நூலின் பல இடங்களில் பார்க்கிறோம். திருத்தூதர்கள் அனைவரும் "சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் **இணைந்து ஒரே மனத்தோடு** இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்கள்" (திப 1:14). அவர்கள் தூய ஆவியாரைப் பெற்றுக் கொண்டார்கள்.

பேதுரு சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது "திருச்சபை அவருக்காகக் கடவுளிடம் **உருக்கமாக வேண்டியது**" (திப 12:5). பேதுரு வியத்தகு முறையில் சிறையிலிருந்து விடுதலை பெற்றார்.

எருசலேம் செல்வதற்காக எபேசு நகர மூப்பர்களிடம் விடைபெற்றபோது பவுல் "**முழந்தாள்படியிட்டு அவர்களெல்லாரோடும் சேர்ந்து** இறைவனிடம் வேண்டினார்" (திப 20:36). அனைவரும் ஊக்கம் பெற்றுக்கொண்டார்கள்.

எனவே, நாமும் இணைந்து மன்றாடுவோம். பனிமயத் தாயின் பெருவிழாவை நாம் எப்படிக் கொண்டாட வேண்டுமென்று இறைவன் விரும்புகிறாரோ, அவ்வாறே நாம் கொண்டாடி, பனிமயத் தாய் வழியாக ஆண்டவரின் ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோமாக!.



என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்

உதயம் 21 தாரகை 11

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | |
|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**சமூக நட்பு**

மோதலின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைகளில், உரையாடல் மற்றும் நட்பின் தைரியமான மற்றும் உணர்ச்சிமிக்க கட்டிடக் கலைஞர்களாக நாம் இருக்க வேண்டும் என்று மன்றாடுவோம்.

# உள்ளே...

1. "வாழ்க அரசியே" ....................4
அருள் மரி வேந்தன்

2. மரியன்னை புனிதர்கள் :
புனித காத்தரின் லபோரே ....................6
அருள்பணி. குமார்ராஜா

3. பனிமய அன்னை ....................8
தி. சொர்ணராஜன் விக்டோரியா

4. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்... ......10
செல்வராஜ் மிராந்தா

5. பனிமயம் - மீள்பார்வை ....................12
கலாபன் வாஸ்

6. பன்னாட்டுத் திருஅவை ....................14
"மிலியன்"

7. விவிலியப் போட்டி ....................16

8. பனிமயப் பகிர்வு ....................20

9. மாதம் ஒரு மாதா படம் ....................24

மரியன்னையின் மேன்மைகள் : 17

மரியன்னை மன்றாட்டுகள் : 2

# “வாழ்க அரசியே!”



**மிகவும் புகழ் பெற்ற மரியன்னை** மன்றாட்டு எது என்று கேட்டால், என்ன பதில் சொல்வீர்கள்? “மிகவும் இரக்கமுள்ள தாயே” என்றுதான் நான் பல காலம் எண்ணி வந்தேன். ஆனால், அதைவிட நீண்ட மரபார்ந்த, பரவலாகப் பயன்படுத்தப்பட்ட செபம் “வாழ்க அரசியே” என்பதை அறிந்தபோது பெரிதும் மலைக்கவில்லை. காரணம், இந்த மன்றாட்டின் ஈர்ப்பும், மரபும்தான். என்ன, இந்த மன்றாட்டைக் கேள்விப்பட்டதேயில்லையே என்று வியக்கிறீர்களா? “கிருபை தயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க” என்பதுதான் அந்த மன்றாட்டு,

“Hail Holy Queen” என்று ஆங்கிலத்திலும், “Salve Regina” என்று இலத்தீன் மொழியிலும் இந்த மன்றாட்டு அறியப்படுகிறது. “சால்வே ரெஜினா” என்ற பாடலை கிரகோரியன் இசையில் கேட்டுள்ள கத்தோலிக்கர் பேறுபெற்றோர். அந்தப் பாடலைக் கேட்கும்போதே, அதன் கம்பீரமும், ஈர்ப்பும், இனிமையும் நம்மைக் கவர்வதில் வியப்பில்லை.

செபமாலையின் இறுதி மன்றாட்டாக இந்த செபமே காலங்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அது மட்டுமல்ல, திருஅவையின் மன்றாட்டு நூலான “திருப்புகழ் மாலையின்” நான்கு மரியன்னைப் பாடல்களுள் பிரபலமான ஒன்று என்பதுவும் இதன் கூடுதல் சிறப்பு.

இந்த மன்றாட்டை முதன் முதலாகத் தமிழில் மொழிபெயர்த்தவர்கள் அதனை நேர்த்தியாகச் செய்யவில்லை என்று நான் நினைக்கிறேன். முதலில், “கிருபை”, “தயாபம்”, “மதுரம்” “ஜீவியம்” என வடமொழிச் சொற்கள் அதிகம் உள்ளன. அதைவிட மேலாக, மூல மன்றாட்டின் கம்பீரமும், சொல் நடையும் தமிழ் மொழிபெயர்ப்பில் இல்லை என்றே தோன்றுகிறது.

பாருங்கள், இலத்தீனில் “வாழ்க அரசியே” (சால்வே ரெஜினா) என்றும், ஆங்கிலத்தில் “வாழ்க, புனித அரசியே” (ஹெயில் ஹோலி க்வீன்) என்றும் தொடக்கச் சொற்களிலேயே இந்த செபத்தின் வலிமையும், அழகும் வெளிப்பட்டு விடுகின்றன.

ஆனால், தமிழிலோ “கிருபை தயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க” என்ற நீளமான தொடக்கம் அதன் எழிலைக் குறைத்து விட்டது. மரியன்னைக்குச் செலுத்த வேண்டிய முதல் வணக்கம் முதலிலேயே வராதது குறையாகவே தோன்றுகிறது. இதனை உணர்ந்ததாலோ என்னவோ தற்பொழுது “வாழ்க அரசியே” என்று தொடங்கும் வகையில் இந்த மன்றாட்டை மறுமொழிபெயர்ப்பு செய்துள்ளார்கள். அதற்குப் பொருத்தமான மெட்டும் இணைக்கப்பட்டுள்ளது. விரைவில் “வாழ்க அரசியே” என்னும் மன்றாட்டும், பாடலும் பிரபலம் அடையும் என்று நம்புகிறேன்.



சரி, இந்த மன்றாட்டின் சிறப்புகளைக் காண்போம். திருப்புகழ்மாலையின் புகழ்பெற்ற மரியன்னைப் பாடல்களில் இதுவும் ஒன்று எனப் பார்த்தோம். குறிப்பாக, சனிக்கிழமைகளின் இரவு செபங்களில் இது கட்டாயம் பாடப்படும். அவ்வாறே, செபமாலையின் இறுதியில் இம்மன்றாட்டு செபிக்கப்படுவதும் நெடுங்கால மரபு.

இம்மன்றாட்டு பதினோராவது நூற்றாண்டைச் சேர்ந்த ஹெர்மான் காண்ட்ராக்டஸ் (Hermann Contractus) என்னும் ஜெர்மானிய துறவியால் இலத்தீன் மொழியில் இயற்றப்பட்டது என்று நம்பப்படுகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் குளுனி சபைத் துறவியரால் திருப்புகழ்மாலையில் பாடப்பட்டபிறகுதான் உலகிற்கு இந்த அழகிய மன்றாட்டு அறிமுகமானது. இரா வேண்டலுக்குப் பின்னர் பவனியாக இப்பாடலைப் பாடிக்கொண்டே உறங்கச் செல்வார்களாம் அத்துறவியர். எல்லா அருள்பணியாளர்களுக்கும் இந்த செபம் மிகவும் நெருக்கமானது. குருக்களின் அடக்கச் சடங்கின் இறுதியில் இப்பாடலைப் பாடுவதும் நீண்ட கால மரபு.

பதிமூன்றாம் நூற்றாண்டில் ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களில் மாலை செபத்தில் இந்த செபம் பாடப்பட்டது. கப்பல் மாலுமிகள் தங்கள் பயணத்தின்போது தவறாமல் பாடும் பாடலாகவும் இது மாறியது. கொலம்பசும், அவரது தோழர்களும் புதிய உலகம் தேடிக் கப்பலில் பயணித்தபோது, இந்த செபத்தைச் செபித்தனர் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு மாலை வேளையில் இந்த செபத்தை செபித்துவிட்டு, உறங்கச் சென்றனர் கொலம்பஸ் குழுவினர். மறுநாள் காலையில் (தென்) அமெரிக்காவைக் கண்டு, அதில் கால் பதித்தனர் அவர்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டில் புனித அல்போன்ஸ் லிகோரியார் “மரியாவின் மேன்மைகள்” (The Glories of Mary) என்ற நூலில் இந்த மன்றாட்டை விவரித்து எழுதினார். அந்த நூலின் முதற் பகுதியில் இந்த மன்றாட்டின் சிறப்புகளையும், இரண்டாம் பகுதியில் மரியன்னைத் திருவிழாக்களையும் பற்றி விரிவாக எழுதினார்.

அந்த முதல் பகுதியில் “கிருபை தயாபத்துக்கு மாதாவாய் இருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க” என்னும் செபத்தை ஒவ்வொரு வரியாக விளக்கி பத்து அதிகாரங்களில் விவரித்துள்ளார். அதன் ஆங்கில மொழிபெயர்ப்பில், இந்த பத்து அதிகாரங்களும் 305 பக்கங்கள் எழுதப் பட்டுள்ளனவென்றால் என்ன சொல்வது? பத்து வரிகள் கொண்ட ஒரு செபத்திற்கு, பத்து அதிகாரங்கள் விளக்கவுரை எழுதப்பட்ட சிறப்பு, வேறு எந்த செபத்திற்கு உண்டு, சொல்லுங்கள். இந்நூல் வெளிவந்தபிறகு, இம்மன்றாட்டு இன்னும் புகழடைந்தது.

திருத்தந்தை 13ஆம் சிங்கராயர் (லியோ) 1884ஆம் ஆண்டில் திருப்பலியின் இறுதியில் இந்த மன்றாட்டைச் சேர்க்குமாறு அறிவித்தார். இவ்வாறு, மெல்ல மெல்ல இது அகில உலகத் திருஅவையிலும் பரவலாக செபிக்கப்பட்டு, புகழ் பெற்ற மன்றாட்டாக மாறியது. புனித அல்போன்ஸ் லிகோரியாரைப் பின்பற்றி, பல புனிதர்களும் இந்த மன்றாட்டின் பக்தர்கள் ஆயினர். பல திருத்தந்தையரும் இந்த செபத்தை விருப்புடன் செபித்தனர். தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் விலக்கல்ல. இரக்கத்தின் ஆண்டை அறிவித்து, “இரக்கத்தின் முகம்” என்னும் மடலை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ், இரக்கத்தின் ஆண்டில் இந்த இரக்கத்தின் மன்றாட்டை செபிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

எண்ணூறு ஆண்டுகள் பழமையான இந்த மன்றாட்டை நாமும் நாள்தோறும் செபித்தால் என்ன? தமிழிலோ, ஆங்கிலத்திலோ, அல்லது இலத்தீன் மொழியிலோ, இந்த மன்றாட்டை மனப்பாடம் செய்து அன்றாடம் அன்னை மரியாவைப் போற்ற முன்வாருங்கள்.

**அருள் மரி வேந்தன்**

# புனித காத்தரின் லபோரே

(1806 - 1876)

## புதுமை மெடலை அறிமுகப்படுத்தியவர்!




மரியன்னையின் புதுமை மெடலை (miraculous medal) பார்த்திருக்கிறீர்களா? ஒவல் வடிவ மெடலின் ஒரு பக்கத்தில் மரியன்னை இரு கைகளையும் விரித்து நம்மை அழைக்கிறார். அதன் சுற்றுவட்ட ஓரத்தில் "மரியே, பிறப்புநிலைப் பாவமின்றி உற்பவித்தவரே, உம்மைத் தேடிவரும் எங்களுக்காக மன்றாடும்" என்று பொறிக்கப்பட்டுள்ளது. மறுபக்கம், "மரியா" என்னும் பெயருக்கான ஆங்கில எழுத்து "எம்", அதன் மேலே ஒரு சிலுவை, அடியிலே இரண்டு இதயங்கள், அவற்றைச் சுற்றிலும் 12 விண்மீன்கள்.

ஓ, இப்பொழுது இந்த மெடல் உங்களுக்கு நினைவுக்கு வந்திருக்கும். பக்த சபைகளின் நாடாக்களில் இந்த மெடல்தான் தொங்குகிறது. ஒரு காலத்தில் ஏராளமான கத்தோலிக்கர்கள் இந்த மெடலைத் தங்கள் கழுத்தில் அணிந்திருந்தார்கள். புதுமை மெடல் என்று அழைக்கப்படும் இதனை மரியன்னையிடமிருந்து நமக்குப் பெற்றுத் தந்தவர் பிரான்ஸ் நாட்டு அருள்சகோதரி புனித காத்தரின் லபோரே.

பிரான்ஸ் நாட்டின் பர்கண்டி பகுதியில் பியர்ரே லபோரே, மதலேன் லூயி என்னும் விவசாயப் பெற்றோரின் 11 பிள்ளைகளில் ஒன்பதாவதாகப் பிறந்தார். ஒன்பது வயதிலேயே தாயை இழந்தார். தாயின் அடக்கத்திற்குப் பின் மரியன்னையின் சுருபத்தை முத்தமிட்டு "இனி நீர்தான் எனக்குத் தாய்" என்று சொன்னாராம் சிறுமியான காத்தரின். அப்போதிருந்தே மரியன்னையின் மகளாகவே விளங்கினார்.

தமது உறவினரின் அரவணைப்பில் வளர்ந்த சிறுமி காத்தரினின் கனவில் ஒரு குருவானவர் (புனித வின்சென்ட் தே பவுல்) தோன்றி, "மகளே, நோயாளர்களைப் பராமரிப்பது நல்ல பணி. கடவுள் உனக்காகத் திட்டங்கள் வைத்திருக்கிறார்" என்றாராம். இதுவே அவர் இறையழைத்தல் பெறக் காரணியாய் அமைந்தது.

புனித வின்சென்ட் தே பவுல் தோற்றுவித்த அன்பின் பணியாளர் துறவற சபையில் சேர்ந்து துறவியானார். பாரிஸ் நகரின் ரூ டு பாக் என்னுமிடத்திலுள்ள கன்னியர் இல்லத்தில் அவர் இருக்கும்போதுதான் தனது 24ஆவது வயதில் அந்த திருப்புமுனை நிகழ்வு நடந்தது. 1830 ஜூலை 19ஆம் நாள் இரவில் மரியன்னையைக் காட்சியில் கண்டார்.

தூங்கிக்கொண்டிருந்த காத்தரினை ஒரு சிறுவன் எழுப்பினான். "மரியன்னை உங்களுடன் பேச விரும்புகிறார்கள். சிற்றாலயத்துக்கு வாருங்கள்" என்று அழைத்தான். மலைத்துப்போன காத்தரின் அந்த நள்ளிரவில் அங்கு சென்றபோது சிற்றாலயம் விளக்குகளால் ஒளிவீசியது. அன்னை மரியா அவருக்குத் தோன்றினார். "உனக்குப் புதியதொரு பணி காத்திருக்கிறது. கலங்காதே. உனக்குத் தேவையான அருள்கொடைகள் தரப்படும். உமது ஆன்ம குருவிடம் அனைத்தையும் பகிர்ந்துகொள்" என்றார் அன்னை மரியா.

தொடர்ந்து, மாலை தியான நேரங்களில் மரியன்னையைப் பலமுறை காட்சியில் கண்டார் காத்தரின். தொடக்கத்தில் நாம் பார்த்த மெடலின் காட்சிகளைத்தான் கண்டார். அன்னை கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த காட்சிகளை உள்ளடக்கிய மெடல்களைச் செய்து வினியோகிக்குமாறு ஆன்ம குருவிடம் சொன்னார் காத்தரின். "இந்த மெடலை அணிகிறவர்கள் ஏராளமான அருள்கொடைகளைப் பெற்றுக் கொள்வார்கள்" என்று வாக்களித்தார் அன்னை மரியா.

காத்தரினின் நடவடிக்கைகளைப் பல மாதங்கள் கண்காணித்த ஆன்ம குரு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பாரிஸ் பேராயரிடம் இந்தச் செய்தியைப் பகிர்ந்துகொண்டார். மரியன்னை கேட்டுக்கொண்டதற்கிணங்க மெடல்கள் செய்ய அனுமதி கேட்டார். பேராயர் அனுமதி தந்ததும் ஆட்ரியன் என்பவரால் மெடல்கள் வடிவமைக்கப்பட்டன. குறுகிய காலத்தில் இந்த மெடல்கள் மக்கள் நடுவில் பிரபலமடைந்தன. அந்த மெடல்களை அணிந்தவர்கள் பல புதுமைகளைப் பெற்றதால், "புதுமை மெடல்" என்று பெயர் பெற்றது. ஒரு காலத்தில் ஒரு கோடி மெடல்கள் வழங்கப்பட்டன என்பதை அறிந்து நாம் வியக்கிறோம். 1854ஆம் ஆண்டு "மரியா பிறப்புநிலைப் பாவமற்றவர்" என்னும் நம்பிக்கைப் பேருண்மை அறிவிக்கப்படுவதற்கும் இந்த மெடல் ஓர் உந்துசக்தியாய் இருந்தது என்கின்றனர் திருஅவை வரலாற்றாசிரியர்கள்.

புதுமை மெடல் உருவாகக் காரணியாய் இருந்தாலும், சகோதரி காத்தரின் பிறரால் அறியப்படாமல் மறைவாகவே வாழ்ந்தார். பாரிஸ் நகருக்கு வெளியே இருந்த முதியோர் இல்லத்தில் அடுத்த நாற்பது ஆண்டுகள் முதியோரையும், நோயாளர்களையும் பராமரித்து வந்தார். அதனால் "முதியோரின் பாதுகாவலி" என்றும் புனித காத்தரின் லபோரே அழைக்கப்படுகிறார். எளிய பணிகளோடு அமைதியும் காத்தார் காத்தரின். மரியன்னையைக் காட்சியில் கண்டவர் என்றும், புதுமை மெடல் உருவாகக் காரணர் என்றும் ஒருபோதும் பிறரிடம் சொன்னதில்லை. ஒரு சில கன்னியர்கள் அதுபற்றி அவரிடம் கேட்டபோது, "அது நான் இல்லை" என்று சிரித்துக்கொண்டே சொல்வாராம். அவரது தாழ்ச்சி மற்றும் அமைதியின் காரணமாக "அமைதியின் புனிதை" என்றும் அழைக்கப்பட்டார். நான் கடவுளிடம் "ஆண்டவரே, நீர் என்ன தர விரும்புகிறீரோ, அதைத் தாரும் என்பேன். அவர் ஏதாவது கொடுத்தால், மகிழ்ச்சியுடன் நன்றி சொல்வேன். ஒன்றும் தராவிட்டால், அதற்கும் நன்றி சொல்வேன்" என்று அவரே சொல்லியிருக்கிறார்.

1876ஆம் ஆண்டு தமது 70ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். 1947ல் புனிதையாக அறிவிக்கப்பட்டார். அவரது உடல் இன்னும் அழியாமல் இருந்து, அவரது தூய வாழ்வுக்குச் சான்று பகர்கிறது. மரியன்னையைக் காட்சியில் காணும் மாபெரும் பேறு பெற்றிருந்தும், மரியன்னையைப் போலவே எளிமை என்னும் நற்பண்பிலும், பிறர் நலப் பணிகளிலும் தன்னையே கரைத்துக்கொண்டு, மாதாவின் பிள்ளைகளுக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாய்த் திகழ்கிறார் புனித காத்தரின் லபோரே. அவரைப் போலவே நாமும் வாழ்வோம், புதுமை மெடலை அணிந்து அன்னையின் அருள் கொடைகளைப் பெற்றுக் கொள்வோம்.



**அருள்பணி. குமார்ராஜா**



பனிமய அன்னை 9



# அன்னையின் திருச்சுரூபம்

### எழில் நிறை வதனம்

பனிமய அன்னைப் பேராலயத்தில் கொலுவீற்றிருக்கும் அன்னையின் திருச் சுரூபம், நானூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலான வரலாற்று பெருமை கொண்டுள்ளது.

அன்னையின் இந்த அற்புத திருவுருவம், பக்திப் பரவசமூட்டும் பேரெழில் நிறைந்து, பார்ப்போர் அனைவரையும் மெய்சிலிர்த்து பரவசப்படுத்தும் நிறையருள் கொண்டது. இன்றும் பனிமய அன்னையின் திருச்சுரூபம் அனைத்து மக்களாலும் இன, மத வேறுபாடு ஏதுமின்றி வழிபடப்பட்டு வருகின்றது.

அன்னையின் இந்தத் திருச்சுரூபம்பால் தூத்துக்குடி பரவகுல மக்கள் கொண்டுள்ள மதிப்பு மரியாதையைப் பற்றிக் கூற வேண்டுமாயின், அன்னையின் ஆலயத்தில் கடந்த நானூறு ஆண்டுகளாக கடைப்பிடித்து வந்த அரியதொரு வழக்கம் அனைவர்க்கும் தெரிந்தாக வேண்டும்.

அன்னையின் ஆலயத்தில் குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டுந்தான் மக்கள் அன்னையின் திருச்சுரூபத்தை தரிசிக்க முடியும். மற்ற நேரங்களில் எல்லாம், திருச்சுரூபம் ஒரு திரைச் சீலையால் மறைக்கப்பட்டிருக்கும். நானூறு ஆண்டுகளாக இருந்த வந்த இந்தப் பழக்கம் தற்போது வழக்கில் இல்லை.

### மணிலாவில் அன்னை

இஸ்பானிய நாட்டைச் சார்ந்த **புனித அகஸ்தீனியன் சபை கன்னியர்கள்,** பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள **மணிலா**வில் ஓர் மடம் தோற்றுவித்து இருந்தனர். அங்கு அவர்கள் ஒரு தேவ மாதா சுரூபத்தை **'இரக்கத்தின் மாதா'**வென்று அளவற்ற பக்தியுடன் வணங்கி வந்தனர். போர்த்துக்கீசிய மன்னர் **3-ஆம் ஜான்** (John III) அவர்களால், அகஸ்தீனியன் சபை கன்னியர்களுக்கு அன்பளிப்பாக கொடுக்கப்பட்ட சுரூபம் தான் இது!

பொன்முடியில் பன்னிரு விண்மீன்கள் ஒளிவீச
பொற் பாதத்தில் வெண்ணிலவு காட்சித் தர
பொன்னுடலில் பொன்னாடை புனைந்து.
செந்தாமரைக் கரத்தில் செந்நிற மாதுளம்
பழம் ஒன்றிருக்க
பாலன் இயேசு இடக்கரத்தில்
அமர்ந்திருந்தவாறு
அன்னையின் சுரூபம் அருள் ஒளிவீச
காட்சியளித்தது.

இந்தச் சுரூபம் இஸ்பானிய நாட்டில் மரத்தினால் உருவாக்கப்பட்டதாகும்.

### மணிலா சென்ற சவேரியார்

முத்துக்குளித்துறையில் இறைபணியாற்றிய சவேரியார் 1549 ஆம் ஆண்டு சீனா நாட்டுக்குச் செல்லும்போது, **மணிலா**வில் சில காலம் தங்கினார். அங்கு புனித அகுஸ்தீன் சபைக் கன்னியர் மடத்தில் அன்னையின் அற்புத சுரூபத்தைக் கண்ட புனித சவேரியார், அன்னையின் சுரூபத்து அழகினால் ஈர்க்கப்பட்டு விம்மிதம் அடைந்தார்.

முத்துக்குளித்துறையின் பரவ மக்கள் புதிதாக மனந்திரும்பி கிறிஸ்தவத் திருமறையை தழுவிய பின்னருங்கூட இந்து பெண் தெய்வங்களான மதுரை மீனாட்சி, கன்னியாகுமரிப் பகவதி ஆகியவற்றை வணங்கி வந்தனர். பரவ மக்களை இந்தப் பெண் தெய்வப் பற்றிலிருந்து மீட்க, அவர்களுக்கு அன்னையின் அழகு சுரூபத்தை பெற்றுக்கொடுக்க பெரிதும் விரும்பினார். இதுபற்றி சவேரியார் அகுஸ்தீன் சபைக் கன்னியர்களிடம் மன்றாடி கேட்க, கன்னியர்கள் மறுத்துவிட்டனர்.

### மனம் மாறிய கன்னியர்கள்

1552 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் தேதி பின்னிரவில் புனித சவேரியார் **சான்சியன்** (Sancian) தீவில், பாக்கியமான மரணமடைந்தார்.

மூன்றாண்டுகளுக்கு பிறகு சவேரியாரை ஒரு புனிதர் என்று அவருடைய பிரதாபங்கள்

மூலம் கேள்விப்பட்ட புனித அகுஸ்தீன் சபைக் கன்னியர்கள், புனித சவேரியாரின் வேண்டுகோளை நிறைவு செய்ய விரும்பினர். அவர்கள் அன்னையின் திருச்சுரூபத்தை பரவ மக்களுக்கு அன்பளிப்பாக கொடுக்க முன் வந்தனர்.

### தூத்துக்குடி வந்த திருச்சுரூபம்

1555 ஆம் ஆண்டு ஜூன் 9 ஆம் நாளன்று, **சந்தலேனா** (Santa Helena) என்ற கப்பல் மூலம் அன்னையின் அற்புத திருச்சுரூபம் தூத்துக்குடி வந்து சேர்ந்தது.

கோவா மறைமாநிலப் பெரிய குருவாக இருந்த **மிக்கேல் வாஸ் சுவாமிகள்,** அன்னையின் திருச்சுரூபத்தை வரவேற்று சம்பவுல் ஆலயத்தில் 'பரதரின் மாதா' எனும் நாமத்துடன் ஆடம்பரமாக நிறுவினார்.

பரவ குல சாதித் தலைவர் தொன் **மிக்கேல் ஜோவாம் தெக் குரூஸ்** (1553-1562), சுரூபம் தூத்துக்குடிக்கு வந்த செய்தியை முத்துக்குளித்துறை மக்கள் அனைவர்க்கும் தெரியப்படுத்தினார். ஏழு கடற்றுறை வாழும் அடப்பன்மாரும், பட்டங்கட்டிகளும், ஏனைய பரவ மக்களும் தூத்துக்குடிக்கு வந்து, அன்னையின் திருச்சுரூபத்தை கோலாகலத்துடன் வரவேற்றனர்.

### அன்னையின் திருவிழா

அன்னையின் திருச்சுரூபம் தூத்துக்குடிக்கு வந்த பிறகு, முத்துக்குளித்துறைக்கு வசந்தமே வந்தது போலாயிற்று. பரவ மக்களின் முத்துக்குளிப்பு வளம் பெற்றது; அவர்களின் விசுவாசமும் தளைத்தது. முத்துக்குளித்துறை மக்கள் ஆண்டு தோறும் ஆகஸ்ட் 5 ஆம் நாளன்று 'சம்பவுல் ஆலய விழா'வை 'பனிமய அன்னையின் திருநாளென' பெருந் திருவிழாவாக கொண்டாடத் தொடங்கினர்.

1600 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்ட பனிமய அன்னையின் திருநாளைப் பற்றி, 1600 ஆம் ஆண்டின் இயேசு சபை அறிக்கை கூறுவதாவது :

"இவ்வாண்டு இயேசு சபை கோவா மாநில அதிபர் சுவாமி நிக்கோலாஸ் பிமெந்தா (Nicholas Pimenta) பனிமய மாதா திருவிழாவுக்கு வருகை தந்தார். ஆலயத்தின் தலைமைப் பீடம் ரோசா மலர்களாலும் மெழுகுவர்த்திகளாலும் வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. தலைமைப் பீடத்தில் அன்னையின் அழகு சுரூபம் கொலுவீற்றிருந்தது. முத்துக்குளித்துறையில் பணியாற்றும் எல்லா இயேசு சபைக் குருக்களும் விழாவுக்கு வருகை தந்திருந்தனர். திருநாளன்று ஏராளமான மக்கள் பாவ சங்கீர்த்தனம் செய்து நற்கருணை உட்கொண்டனர். திருநாளன்று நடைபெற்றப் பவனியில் ஏராளமான சப்பரங்கள் இடம் பெற்றன. தேவ மாதா, குழந்தை இயேசு, இராயப்பர், சின்னப்பர், ஸ்நாபக அருளப்பர், செபஸ்தியார், ஏரோனிமுஸ், மிக்கேல் அதிதூதர், லவுரேஞ்சியார், முடியப்பர், கிறிஸ்தோபர் ஆகிய புனிதர்களின் திரு உருவங்கள் கொண்ட அழகியச் சப்பரங்கள் ஆரவாரச் சிறப்புடன் எடுத்துச் செல்லப் பட்டன.

தூத்துக்குடி புனித இராயப்பர் கோவில் பங்குக் குருவும், தேவ அன்னை மடத்தின் பிரான்சிஸ்கு சபைத் துறவிகளும் விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்தனர்.

பரவர்கள் பொதுவாக இயேசு சபைக் குருக்களை மிகவும் அன்பு செய்தனர். தூத்துக்குடியில் இயேசு சபையினர் பங்குக் குருக்களாக இல்லாவிட்டாலும், பரவ தலைவர்கள் இயேசு சபை மாநிலத் தலைவருக்கு பல அருமையான சந்திப்புக்கள் வழங்கினார்கள்".

மேற்கூறிய விபரங்களை, தலைமைக்குரு சுவாமி நிக்கோலாஸ் பிமெந்தா அவர்களுடன் வந்த துணைச் சுவாமி சொசியஸ் அடிகளார் (Socius) எழுதி வைத்துள்ளார்.

1602 ஆம் ஆண்டின் இயேசு சபை அறிக்கை, பனிமய அன்னையின் திருச்சுரூபத்திற்கு ஒரு அழகிய மாந்தை வாங்க 10 பர்தாவோ (Pardau) என்னும் பணத்தை காணிக்கையாக ஒரு பரவ கிறிஸ்தவர் கொடுத்தார், என்று பாராட்டிக் கூறுகிறது.

– (தொடரும்)



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**








# 2 பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...

## (1930 - 1954)

தூத்துக்குடியில் 1923ஆம் ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மறைமாவட்டத்தில் ஏழாண்டுகள் சென்ற பிறகே 1930இல் தூய பனிமய ஆலயப் பங்கு சேர்ந்ததென்றும் அதன் முதல் பங்குத் தந்தையாக அருள்திரு அம்புரோஸ் மிசியர் அடிகளார் பொறுப்பேற்றார்களென்றும், இரண்டாண்டுகள் கழிந்தபின் 1932இல் அருள்திரு அந்தோனி பர்னாந்து சுவாமியவர்கள் பொறுப்பேற்றார்கள் என்றும் சென்ற இதழில் பார்த்தோம்.

அருள்திரு அந்தோனி சுவாமியவர்கள் 1932இல் பொறுப்பேற்றபோது ஆலயத்தின் முகடு அருள்திரு விஜிலியுஸ் மான்சி அடிகளார் கட்டியபோது நாழி ஓடுகளால் வேயப்பட்டது போலவே ஒரு மாற்றமுமின்றி இருந்ததாகவும் மழை புயல் காலங்களில் நாழியோடுகள் நிலைகுலைந்து மழைநீர் ஒழுகக் கூடிய நிலையிருந்ததாம். அந்தக் காலத்தில் பெரும்பான்மையான பங்குமக்கள் இலங்கையில் வணிகம் செய்து பொருளீட்டி வந்த காரணத்தால் அவர்களின் பொருளுதவியோடு ஆலயத்தின் முகட்டை கலிக்கட் ஓடுகளால் வேய்ந்து அதற்கு வேண்டிய ரீப்பர்களும் பொருத்தி ஃரோக் ரக தரமான ஓடுகளை வருத்தி திருப்பணி செய்து முடித்தார்களாம்.

இப்போது ஆறேழு வருடங்களுக்குமுன் வீசிய பெரும்புயல் ஆலயத்தின் முகட்டில் இருந்து சில ஓடுகள் கழன்று கீழே விழுந்து உடைந்திருந்தன. அதைச் சீர்செய்வதற்காக விழுந்து கிடந்த ஓடுகள் போல வாங்க தூத்துக்குடியிலுள்ள மரக்கடைகள் முழுவதும் சல்லடைபோட்டு தேடியதில் பழைய ஓடுகளின் அளவிலும் தரத்திலும் ஓடுகள் கிடைக்காது போகவே தற்செயலாக முகட்டின் உள்ளே இறங்கிப் பார்த்தபோது அகலமான பக்கவாட்டு சுவரின் மேல் சீலிங்



ஓரத்தில் பத்து பத்தடி தூரத்தில் இடைவெளிவிட்டு பத்துப்பத்து ஓடுகளை வரிசையாக நெடுக அடுக்கி வைத்திருப்பதைக் கண்டு இறையடியார் சுவாமிகளின் முன் யோசனையையும் வருங்கால எதிர் நோக்கினையும் கண்டு இன்றைய தலைமுறையினர் வியப்படைந்தார்கள்.

பழைய கல்லூரி கட்டிடம் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் இடிபாடுகளாய் இருந்ததை அகற்றி அதே இடத்தில் பிலோமினாஸ் ஹால் என்று 1934ஆம் ஆண்டு ஒரு மண்டபத்தைக் கட்டி முடித்தார்கள். அந்த மண்டபம்தான் இன்று அண்டனீஸ் ஹால் என்று அழைக்கப் படுகிறது. வெகுகாலமாக அதன் கீழ்த்தளத்தில் சிறுவர்களுக்கான ஐந்தாம் வகுப்பு வரையுள்ள ஆரம்பப் பள்ளிக்கூடம் இயங்கி வந்தது.



இன்று தஸ்நேவிஸ் மாதா மேல்நிலைப் பெண்கள் பள்ளிக்கூடம் இயங்கிவரும் வளாகத்தில் முன்பு இரண்டு ஆலயங்கள் இருந்தன. மிகவும் பழைமை வாய்ந்த புனித கித்தேரியம்மாளுக்கு (Santa Quitteria/St. Catherene) ஒப்புக் கொடுக்கப்பட்ட ஆலயம் கிழக்கு நோக்கிய முகப்புடன் மேல்பக்கம் இருந்தது. அதன் பின்புறம் ஒரு நல்ல தண்ணீர் கிணறும் இருந்தது. இன்று கெழுத்துக்குடி என்று அழைக்கப்படும் கீழ தூத்துக்குடி (இன்றைய Snows Hall & Aspinwal Buildingக்கு மேற்கு - புனித சவேரியார் சிற்றாலயத்திற்கு தெற்கு - எஸ்கலின் ஹாலுக்கு வடக்கு - அந்தோனியார் கோயிலுக்கு கிழக்கில் - இவற்றிற்குட்பட்ட இடம்) முன்பு கடல்தொழில் புரிவோரின் குடியிருப்பாக இருந்ததாம். அம்மக்களின் ஒரே குடிநீர் ஆதாரமாக அக்கிணறு இருந்ததாகச் சொல்வர். அருட்தந்தையவர்கள் புனித கித்தேரியம்மாள் ஆலயத்திற்கு எதிரே மேற்கு நோக்கி புனித அந்தோனியாருக்கென ஒரு சிற்றாலயம் கட்டி இரண்டு கோயில்களையும் உள்ளடக்கி சுற்றிலும் மதில் எழுப்பினார்கள் என சில பெரியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அமலோற்பவ மாதா வாலிபர் சபை தொடக்க காலமுதல் தன் வாழ்நாள் முழுவதும் செயல்பட்ட பழம் பெறும் உறுப்பினர்களில் ஒருவராகிய ‘ரவேல்பிள்ளை’ என்று சக உறுப்பினர்களால் அன்பொழுக அழைக்கப்பெற்ற பெரிய நசரேன் ரவேல் அவர்கள் ஆண்டுதோறும் வடக்கன்குளம் சென்று அருள்தந்தையை தரிசித்து வருவார்கள். அருள்தந்தை பனிமய ஆலயப் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய காலத்தின் பிற்பகுதியில் அடிக்கடி ஆதங்கப்பட்டு சொன்ன ஒரு கருத்தை திரு. ரவேல் அவர்கள் சொல்லக் கேட்டிருந்தேன்.

“நம் பங்குமக்கள் வைத்திருக்கிற அசைக்க முடியாத மாதா பக்திக்கும் கிறித்தவ விசுவாச வாழ்வுக்கும் யாதொரு தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லையே. ஆலயத்தில் வழிபாடுகளில் கலந்துகொள்ளும்போது அவர்கள் காட்டும் பக்திப் பரவசத்திற்கும் வெளியிலே அவர்களின் பேச்சும் வாழ்க்கையும் வேறுவிதமாக இருக்கிறதே - ஏன்? அவர்களுக்காக நான் ஜெபிக்கிறேன்” என்று அருள்தந்தை அடிக்கடி சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இறையடியாராக அருள்தந்தை உயர்த்தப் பட்டதைத் தொடர்ந்து அவர் பணியாற்றிய இடங்களில் நிகழ்ந்த அற்புதங்கள் மற்றும் அவர் ஆற்றிய பணிகள் பற்றி சேகரிக்கப் பட்ட விவரங்கள் ஏராளம். அவைகளை எல்லாம் கட்டுரைக்குள் அடக்க முடியாது என்பதால் அவருக்குப் பிறகு பொறுப்பேற்ற அருட்தந்தையர் பற்றி பார்க்கலாம்.

- தொடரும்.



செல்வராஜ் மிராந்தா

# 'பனிமயம்' – மீள் பார்வை 22

## 2003


கொல்கொத்தாவில் அன்னை தெரசா இல்லத்தில், இறந்து போனவர்களுடைய பெயர் பதிவு செய்ய பதிவேடு ஒன்று அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. **குஷ்வந்த் சிங்** என்ற பிரபல எழுத்தாளர், நிர்மல் ஹிருதய விடுதிக்கு ஒருமுறை சென்றிருந்தார். அங்கே படுத்திருந்த நோயாளிகளைப் பார்த்துவிட்டு, இறுதியில், இறந்தவர்களின் பதிவேட்டையும் பார்த்தார். அதில் எழுதப்பட்டிருந்த கடைசிப் பெயர் – சாந்தி தேவி – மதம் : இந்து; நேரம் : காலை 11.30; நாள் : 1973, டிசம்பர் 20. இந்த நிலையத்தில் இறந்தவர்களுள் சாந்தி தேவி 3522–வது ஆள்.



அதற்குப் பின்னும் எத்தனையோ பேர் இறந்திருப்பர். அவர்கள், தெரு ஓரங்களில் விலங்குகளைப் போல் ஆதரவின்றி இறப்பதை தெரசா விரும்பவில்லை. – சேவியர் பாமப்ரா, சே.ச. (இன்றும்கூட சில அரசியல் வாதிகள், மதர் தெரசா மதமாற்றப் பணியையே செய்து கொண்டிருந்தார் என்று வாய்கூசாமல் பிதற்றுகின்றனர்.

★ மரியாளின் விசுவாசம், ஆபிரகாமின் விசுவாசத்திற்கு இணையாக விளங்குவதால் தான், '**விசுவாசிகளின் அன்னை**' என்று புதிய ஏற்பாடு போற்றுகின்றது. அதாவது, மீட்பரான இறைமகன் மனுவுரு எடுக்கும் மறை பொருளை அவள் விசுவசித்த காரணத்தினால் தான் அவள் எல்லா கிறிஸ்தவ மக்களுக்கும் ஓர் அப்பழுக்கற்ற விசுவாசத்தின் மாதிரிகையாக விளங்குகிறாள். அதனால் அவர்கள் திருச்சபையிலும் தங்களுக்குள்ளும் இறையருளையும் இறைவார்த்தையையுமே அடித்தளமாகக் கொண்ட விசுவாச வாழ்வை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள ஏதுவாகிறது. – **கிறிஸ்டியன் டிவோட்டா.**

★ **லோஞ்சினூஸ்** திருவிலாத் தண்ணீரும் திரு இரத்தமும் தெளிக்கப்பட்டு திருமுழுக்குப் பெற்ற முதல் கிறிஸ்தவனாக மாறுகிறான். அவனோடு சிலுவையடியில் நின்று இயேசுவைச் சிலுவையில் அறைந்து பகடி பரிகாசம் பண்ணிய அநேக ரோமப்படை வீரர்களும் நடந்தவற்றைக் கண்டு, மனம் குத்துண்டு, மனம் மாறி, இயேசுவை இறைவனாக ஏற்றுக் கொள்கின்றனர். இயேசுவின் வலதுபுறச் சிலுவையில் **தீஸ்மாஸ்** என்ற கள்வனின் பெயரும், இடதுபுறம் **கெஸ்டாஸ்** என்ற கள்வனின் பெயரும் கிரேக்கத்தில் எழுதப்பட்டுள்ளன. படைவீரன் கடற்பஞ்சில் காடியைத் தோய்த்துக் கொடுப்பதைக் காண்கிறோம்.



லோஞ்சினூஸ், உரோமை ராணுவத்தில் இருந்து விலகி, துறவியாக வாழ்ந்து, துருக்கியிலுள்ள **கப்படோசியா** என்னும் இடத்தில் வேத சாட்சி யாகத் தலை துண்டிக்கப் பட்டார். புனிதராக உயர்த்தப்பட்டு, வத்திக்கானில் புனித இராயப்பர் பேராலயத்தில் அவரது ஈட்டி

வைக்கப் பட்டுள்ள பீடத்தில், அவரின் உருவம் வணங்கப்படுகிறது. – **பழையகாயல் மைக்கிள் ராஜ் டிமெல்.**

★ இறந்தோரின் உயிர்ப்பும் இருக்கும். அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது, அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது. மதிப்பற்றதாய் விதைக்கப்படுவது, மாண்புக்குரியதாய் உயிர்பெற்று எழுகிறது. வலுவற்றதாய் விதைக்கப்படுவது, வல்லமை உள்ளதாய் உயிர்பெற்று எழுகிறது. மனித இயல்பு கொண்ட உடலால் விதைக்கப்படுவது, ஆவிக்குரிய உடலாய் (SPIRITUAL BODY) உயிர்பெற்று எழுகிறது. இதன் அடிப்படையில்தான் இறந்தோர் அனைவரும் மாற்றுரு பெறுகின்றார்கள். இம்மாற்றுரு நடைபெறும் நிகழ்ச்சி, ஒரு நொடிப்பொழுதில் கண் இமைக்கும் நேரத்தில் நடைபெறுகிறது என்று தூய பவுலடியார் உறுதிப்படுத்துகிறார். இவையனைத்தும், ஆண்டவர் கிறிஸ்து வழியாக நடந்தேற தந்தையாம் கடவுள் நியமித்துள்ளார். – **அருட்திரு. J. இரத்தினராஜ்.**

★ நாம் சமுதாயத்திலே வாழ்வதால், நம்முடைய முடிவும் சமுதாயத்தோடு இணைந்ததாக அமைய வேண்டும்.

தனித்து நின்று நம்முடைய முடிவை அடைய முடியாது. இவ்வுலக வாழ்வில், பிறர் மட்டில் நமக்குரிய கடமைகளை நிறைவேற்றியாக வேண்டும்.

பிறரை மதிப்பது, மனித மாண்புடன் அவர்களை ஏற்றுக் கொள்வது, அவர்களின் உரிமைகளை ஏற்று அவர்களின் குறிக்கோளை அடைய வழி வகுப்பது, அவர்களின் வாழ்வில் அன்பும் மகிழ்ச்சியும் சமாதானமும் நிலவச் செய்வது இன்றியமையாததாகும்.

“உன்னைக் கேட்காமல் உன்னைப் படைத்த இறைவன், உன் துணையின்றி உன்னை வானகம் சேர்க்கமாட்டார்” – என்கிறார் **புனித அகுஸ்தினார்.**

நாம் முடிவில்லா வாழ்வு பெறுவது, இறைவனின் செயல் மட்டுமல்ல – நம் செயலும் கூட. மனிதன் படைக்கப்பட்டது இறைவனுக்காக. இறைவனுக்காகவே வாழ்ந்து, இறுதியில் அவர் திருவடி நிழலையடைவதே மனிதனின் கதி – உன்னத நிலை – **கலாபன் வாஸ்.**

★ திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால், 1978 அக்டோபர் 16–ல் பாப்புவாகப் பொறுப்பேற்றபின் –

- 456 பேர் புனிதர்கள் நிலைக்கு உயர்த்தப் பட்டனர்.
- 1282 பேருக்கு முத்திப்பேறு பெற்றவர்கள் பட்டம் கொடுக்கப்பட்டுள்ளது.
- 13 திருமடல்கள், 41 அப்போஸ்தலிக்க மடல்கள் எழுதியுள்ளார்.
- புனிதப் பயணங்கள் நூற்றுக்கும் அதிகமாக மேற்கொண்டுள்ளார்.
- 130 நாடுகளுக்குத் திருப்பயணம் செய்து வந்துள்ளார்.
- 31 கர்தினால்களை நியமித்துள்ளார்.

இவையெல்லாம் திருஅவையின் புதிய வரலாறு.

★ கி.பி. 431ல், எபேசு நகரில் கூடிய திருச் சங்கம், அன்னை மரியாளை “இறைவனின் தாய்’ என அறிக்கை செய்தது.

மரியன்னை திருச்சபையின் வணக்கங்களில், கிறிஸ்துவுக்கு அடுத்த இடத்தைப் பெறுகிறார்கள். இயேசுவுக்கே “**‘ஆராதனை’** (LATRIA). மரியன்னைக்கு **‘மேலான வணக்கம்’** (HYPER-DUALIA). புனிதர்களுக்கு **‘வணக்கம்’** (DUALIA) என்றே திருச்சபை போதிக்கிறது. இதனைக் கத்தோலிக்கத் திருச்சபையினைச் சார்ந்தோரும், அதனை எதிர்க்கும் பிரிவினைச் சபையினரும் மிகவும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். – **முனைவர் அருட்திரு. ஜான் எஸ். செல்வம்.**

*– அடுத்த இதழில் 2004*



**கலாபன் வாஸ்**

94863 90793





நம் திருச்சபை, நமது பெருமை - 2

# பன்னாட்டுத் திருஅவை

உலகில் எத்தனை நாடுகள் இருக்கின்றன? இந்தக் கேள்விக்கு சரியான விடை இல்லை என்று சொன்னால் வியப்பாய் இருக்கிறதா? ஆம், உண்மையில் உலக நாடுகளின் எண்ணிக்கையில் வேறுபாடுகள் இருக்கின்றன. உலகத்தில் 200க்கும் மேற்பட்ட நாடுகள் இருந்தாலும், ஐக்கிய நாடுகளின் ஒன்றிப்பில் (United Nations Organization) 195 நாடுகளே உறுப்பினர்களாக இருக்கின்றன. எனவே, அதையே உலக நாடுகளின் எண்ணிக்கையாக எடுத்துக்கொள்ளலாம். அத்தனை நாடுகளிலும் கத்தோலிக்கர்கள் இருக்கின்றனர் என்பது பெருமிதம் தரும் செய்திதானே!

**1. பெரிய கத்தோலிக்க நாடுகள்.** உலகிலேயே அதிக கத்தோலிக்கர்களைக் கொண்ட நாடு என்னும் பெருமை தென்னமெரிக்க நாடான **பிரசிலையே** சாரும். அங்கே 120 மில்லியன் (12 கோடி) கத்தோலிக்கர்கள் வாழ்கின்றனர். 98 மில்லியன் கத்தோலிக்கருடன் (10 கோடி) **மெக்சிகோ** நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. ஆசிய கண்டத்தைச் சேர்ந்த **பிலிப்பைன்ஸ்** (88 மில்லியன் கத்தோலிக்கர் (8 கோடி) மூன்றாம் இடம் பெறுகிறது. தொடர்ந்து, அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ், கொலம்பியா, போலந்து, ஸ்பெயின், காங்கோ ஆகிய நாடுகள் உலகின் 10 பெரிய கத்தோலிக்க நாடுகளாகத் திகழ்கின்றன.

**2. கம்யூனிச நாடுகளில் திரு அவை.** ஒரு காலத்தில் சோவியத் ரஷ்யா, சைனா, கியூபா, வியட்நாம் போன்றவை கம்யூனிச நாடுகள் என்று அழைக்கப்பட்டன. அந்நாடுகளில் கடவுள் மறுப்புக் கொள்கை பின்பற்றப்பட்டது. இருப்பினும், அங்கும் கத்தோலிக்கர்கள் வாழ்கிறார்கள், கோவில்களில் கடவுளை வழிபடுகிறார்கள். **சைனா**வில் இரண்டு விதமான கத்தோலிக்கர்கள் உள்ளனர். ஒன்று சீன அரசு ஒப்புதல் தந்து அனுமதித்துள்ள திருச்சபை. இவர்கள் வெளிப்படையாக வழிபாடு நடத்துகின்றனர். மற்றொன்று சீன அரசின் ஒப்புதலின்றி மறைமுகமாக செயல்படும் திருச்சபை. எப்படியும் சைனாவில் 20 மில்லியன் (2 கோடி) கத்தோலிக்கர்கள் இருப்பார்கள் என்று கருதப்படுகிறது. ஃபிடல் காஸ்ட்ரோவின் **க்யூபா**வில் முன்னர் கத்தோலிக்க வழிபாடுகள் தடைசெய்யப்பட்டிருந்தன. திருத்தந்தையர் இரண்டாம் ஜான் பவுல் (1998), 16ஆம் பெனடிக்ட் (2012) மற்றும் பிரான்சிஸ் (2015) என மூன்று திருத்தந்தையர் இந்தச் சிறிய நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்பது ஒரு வியப்பான செய்தியே. இப்போது அங்கே 6 மில்லியன் கத்தோலிக்கர்கள் உள்ளனர். **வியட்நாமில்** 7 மில்லியன் கத்தோலிக்கர்கள் உள்ளனர். இவையெல்லாம் நம்மைப் பெருமிதப் படுத்துகின்றன.

**3. இஸ்லாமிய நாடுகளில் திரு அவை.** எல்லா இஸ்லாமிய நாடுகளிலும் கத்தோலிக்கத் திருஅவை செயல்படுகிறது. துபாய், குவைத், அபுதாபி போன்ற அரபு நாடுகளில் மிகப்பெரும் கோவில்கள் கட்டப்பட்டுள்ளன. உண்மையில், உலகின் மிகப் பெரிய பங்கு துபாயில்தான் உள்ளது. 3,50,000 குடும்பங்களுடன், 12 மொழிகளில் திருப்பலி நிறைவேற்றப்படும் மிகப்பெரும் பங்காக துபாய் புனித மரியன்னைப் பங்கு உள்ளது. இஸ்லாமின் புனித நாடான, மெக்கா-மெதினா திருநகரங்களைக் கொண்ட **சவுதி அரேபியா**வில் பிற மதக் கோவில்கள் கட்டத் தடை உள்ளது. ஆனால், அங்கும் ஒரு மில்லியன் கத்தோலிக்கர்கள் வாழ்கிறார்கள். பலரும் வெள்ளிதோறும் திருப்பலிகளில் கலந்துகொள்கிறார்கள் என்பது வியப்பான உண்மை. மிகக் குறைவான எண்ணிக்கையில் கத்தோலிக்கர் வாழும் இஸ்லாமிய நாடு **ஆப்கானிஸ்தான்**. தலைநகர் காபூலில் 200 கத்தோலிக்கர்கள் ஞாயிறு திருப்பலியில்



பங்கேற்கின்றனர். 2004ஆம் ஆண்டு அன்னை தெரசாவின் சகோதரிகள் அங்கே அன்புப் பணி புரிய கன்னியர் இல்லங்களை நிறுவினர்.

கத்தோலிக்கர் மிகவும் குறைவாக உள்ள 10 நாடுகள் பட்டியலில் ஆப்கனிஸ்தான் முதலில் இருக்கிறது. தொடர்ந்து, உஸ்பெக்கிஸ்தான், ஏமன், ஈரான், நேபாளம், துருக்கி, பங்களாதேஷ் ஆகியன வருகின்றன. உலகின் ஒரே இந்து நாடு என்று கருதப்பட்ட நேபாளத்தில்கூட பத்தாயிரம் கத்தோலிக்கர்கள் உள்ளனர். உலகில் கத்தோலிக்கர்கள் இல்லாத நாடு எதுவுமே இல்லை என்னும் மாபெரும் பெருமை நமக்கு மட்டுமே உண்டு.

2021ஆம் ஆண்டு கணக்கின்படி உலகில் 1.34 பில்லியன் (134 கோடி) கத்தோலிக்கர்கள் உள்ளனர். இது உலக மக்கள் தொகையில் 17.7% ஆகும். அதாவது, உலகில் ஆறு பேரில் ஒருவர் கத்தோலிக்கர். வேறு எந்த சமயத்துக்கும், பிரிவுக்கும் கிடைக்காத பெருமை இது என்பதில் நாம் பெருமிதம் கொள்ளலாம்.

உலகமயமாக்கலின் விளைவாகவும், மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் பண்பாட்டு மாற்றங்களாலும் வழிபாடுகளில் பங்கேற்போரின் எண்ணிக்கை உலகம் முழுவதும் குறைந்து வருகிறது. இருந்தாலும், கத்தோலிக்கரின் விழுக்காடு குறைவுபடாமலே இருக்கிறது என்பதனை ஆண்டு தோறும் வத்திக்கான் வெளியிடும் அறிக்கை தெளிவு படுத்துகிறது.

எங்கெல்லாம் திருச்சபைக்கு எதிரான செயல்பாடுகள் தீவிரமாக நடைபெறுகின்றனவோ, அங்கெல்லாம் திருச்சபை உயிர்த் துடிப்புடன் செயலாற்றிக் கொண்டு வருகின்றது. கத்தோலிக்க விசுவாசத்துக்காக உயிர் துறக்கும் வீர மரபு முதல் நூற்றாண்டிலிருந்து இன்றுவரையிலும் தொடர்ந்து வருகிறது என்பதில் நாம் பெருமைகொள்ளலாமே!

இந்த உலகம் முழுவதும் “கதிரவன் தோன்றி மறையும் வரை” எங்காவது ஓரிடத்தில் நாள்தோறும் திருப்பலி நிறைவேற்றப்பட்டுக்கொண்டே இருக்கிறது. “ஆங்கிலப் பேரரசில் கதிரவன் அடையாது” என்று முன்னர் சொன்னார்கள், இப்போது அப்படி அல்ல. ஆனால் கத்தோலிக்கத் திருச்சபையைப் பொறுத்தவரை கதிரவன் மறைவதேயில்லை என்பது அன்றும், இன்றும் உண்மை. கடவுளுக்கு நன்றி!

**“மிலியன்”**

# விவிலியப் போட்டி 78

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## திருத்தூதர் பணிகள்

**கோடிட்ட இடத்தை நிரப்புக. விடைகளில் அதிகாரம், வசனம் எழுதவும்.**

1. இப்போதுகூட _____________ , அவர்கள் அச்சுறுத்துவதைப் பாரும்.
2. எகிப்தில் _____________ மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்.
3. இதனால் என் _____________ பேருவகைகொள்கின்றது;
4. _____________ முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு.
5. 'தெய்வங்கள் மனித _____________ நம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன'
6. விண்ணுலகையும் மண்ணுலகையும் கடலையும் அவற்றிலுள்ள அனைத்தையும் _____________ நீரே.
7. _________ என் மகன், இன்று நான் உம்மை ஈன்றெடுத்தேன்' என்று எழுதப்பட்டுள்ளது.
8. என்னிடம் உள்ளதை _____________ க் கொடுக்கிறேன். நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்'
9. பவுல் அவர்களைக் கண்டபோது துணிவு கொண்டு கடவுளுக்கு _____________ செலுத்தினார்.

**விடைகள் அனைத்தையும் கோர்த்தால், உங்களுக்கான இம்மாதச் செய்தி கிடைக்கும். உதவி: அருள்முனைவர் லெரின் டிரோஸ் இயற்றிய "என் இதயம்..." எனத் தொடங்கும் பாடல்.**

**பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயரையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம்: 93856 46923**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.07.2021**

# விவிலியப் போட்டி 77

## ஜூன் 2021 — விடைக்குறிப்புகள்

### உரோமையர் திருமுகம்

| | |
|---|---|
| 1. கடவுளுக்கு | உரோ 11:16; |
| 2. உகந்த | உரோ 8:27 |
| 3. தூய | உரோ 9:1 |
| 4. பலியாக | உரோ 12:1 |
| 5. உங்களை | உரோ 12:21 |
| 6. ஒப்படையுங்கள்; | உரோ 6:13 |
| 7. இதுவே. | உரோ 15:7 |
| 8. கடவுள் | உரோ 9:19 |
| 9. விரும்பும் | உரோ 7:19 |
| 10. காணிக்கை | உரோ 15:16 |

*இம்மாதச் செய்தி:*

**"கடவுளுக்கு உகந்த தூய பலியாக உங்களை ஒப்படையுங்கள். இதுவே கடவுள் விரும்பும் காணிக்கை!"**

**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 88**
**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 119**

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 119**

### I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 68

**விடை எழுதிய அன்பியங்கள் (22)**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. **லியான்டின் சஹானா,** குழந்தை இயேசு அன்பியம்
2. **மேரிஆனி,** லூர்து மாதா அன்பியம்
3. **கெயிட்டன் ஃபர்னான்டோ,** மணல் மாதா அன்பியம்
4. **வின்சென்ட் ரொசிட்டா,** பரிபூரண மாதா அன்பியம்

### II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 51

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. **சபாஸ் ஃபர்னான்டோ,** ஆலந்தலை
2. **சூசை நெவின்,** தூத்துக்குடி -2
3. **சிலுவை அருள்,** உடன்குடி
4. **ஜெசிந்தா ராணி,** கயத்தாறு



**பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து பாராட்டுக்குரியவர்கள் : 64**

**அந்தோனியார் அன்பியம்**
1. டோனி ஆஹா
2. ரெம்சி
3. ஆட்லினோ
4. ரீனா மொராய்ஸ்
5. சரோஜா

**அன்னை தெரசா அன்பியம்**
6. ரெய்ஸா சுஜய்

**அன்னை வேளாங்கன்னி**
7. டென்சி
8. லிசியா ஜெகதீஷ்
9. நான்சி சில்வஸ்டர்
10. மெடோனா ஜோசப்

**கிறிஸ்தரசர்**
11. ஜூலியட் சாவியோ
12. ஸெலஸ்கி கிளமென்ட்
13. ரொசாரியோ ஃப்ளம்மிங்

**தஸ்நேவிஸ் மாதா**
14. இருதயம்மாள்

**திவ்யபாலன் அன்பியம்**
15. சகாயராணி தனராஜ்
16. பிரின்சி சே.

**பாத்திமா மாதா**
17. டாரல் தீத்தோனிஸ்
18. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
19. லொரிட்டா எட்வின்
20. குயின்சி ஆக்னல்
21. ஜெசிந்தா கான்ஸ்டன்

**இரக்கத்தின் மாதா**
22. கெனிட்டா
23. பிரைட்டன் ஜெனோஃபின்

**ஜெபமாலை மாதா**
24. ட்ரிஃபானா கிரான்டின்
25. ஸ்மைலா டிஃபானி
26. அக்ஷன்
27. செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
28. செல்வராணி ரொட்ரிகோ

**காவல் தூதர்**
29. ஜோனதான்
30. ஹசினா
31. ஜெயா அகஸ்டின்
32. ஆரோக்கிய ஃபெல்சி
33. வெனிற்றா

**குழந்தை தெரசா**
34. கிறிஸ்டி லிஸ்டன்

**லூர்து மாதா**
35. ஆலிவர் ஜெனோரா
36. ஃபிலோ கோமஸ்
37. ஜெனோ சேவியர்
38. ரம்யா

**பரிபூரணமாதா**
39. ஜெனிஷா
40. ஷார்மிளா

**பவுலடியார்**
41. ராஜா ரோஸ்லின்
42. லீமாரோஸ் ஜாய்

**பொம்பெயி மாதா**
43. அனிஷா கொரேரா
44. லூடா கான்ஸ்டன்

**இராயப்பர்**
45. டெய்சி அன்டோ மோத்தா
46. இந்திரா ரெஃப்லின்
47. ரெனோ போஸ்கோ

**சவேரியார்**
48. டெலிலா அமலன்
49. ஃப்ளோரியா ஸ்டெல்லா
50. ஜான்சி ஜெயகுமார்
51. மான்சி
52. ஆனந்தி திரவியம்
53. அண்டன் சகாயம்

**செபஸ்தியார்**
54. அந்தோனியம்மாள் டென்சிங்
55. ஜெசிலாசேவியர்
56. ரெஜில் ரெனிஷா

**சிந்தாத்திரை மாதா**
57. டிஜேபிஆர் இராயன்
58. டினோமிராண்டா

**சிறுமலர் அன்பியம்**
59. எல்சிட்டாஆனந்தன்
60. ஓஃபிலியாதாமஸ்

**சூசையப்பர்**
61. ரிஜோ

**திருச்சிலுவை**
62. கில்டன் சரோலின்
63. ஆசினிஎப்பெக்ஸ்
64. ரமணிதாஸ்

---

**இதர பங்குகளிலிருந்து பாராட்டு பெறுபவர்கள் : 47**

**ஆலந்தலை**
65. ஃபொன் சேகா
66. ஜெய்டன் சுதாமதி

**சென்னை**
67. கமலஜோதி ஜெயசீலன்
68. சகாயராணி இம்மானுவேல்

**பாளையங்கோட்டை**
69. குணசீலன்

**கயத்தாறு**
70. அமல்ராஜ் எஸ்.

**குரும்பூர்**
71. சுபாடெரன்ஸ்

**மதுரை**
72. ஜோசப் இராஜமாணிக்கம்
73. ஜோசபின் சலேத்மேரி

**நாகர்கோவில்**
74. மிக்கேல்

**திருவனந்தபுரம்**
75. ஜோசஃபின்

**பெரியகுளம்**
76. குழந்தைதெரஸ்

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**குருஸ்புரம்**
77. மேத்யூ சுசேதா

**திரு இதயங்களின் பேராலயம்**
78. பெனிட்டா

**லயன்ஸ் டவுண்**
79. பூபாலராயர்
80. செரினா

**யூதா ததேயு கோவில்**
81. ரோஸ் சேவியர்

**தூத்துக்குடி இதர பங்குகள்**
82. எல்சி
83. பிளாசி செல்வராஜ்
84. செல்வம் டெலிஷியா
85. ரிமோல்டா
86. சகாயராஜ் ரொட்ரிகோ
87. ஆசிர்வாதம்
88. ரமிலாகமிலஸ்
89. ரமேஷ் நர்மதா
90. ஷாந்தினி
91. சோஃபியா
92. அருள்சகோ. ஜீவா
93. சுசீலன்
94. லிசியாகபில்
95. சுகிர்தா
96. ஜெசிந்தா ஃபர்னான்டோ
97. ஆரோக்கியடெய்சி
98. ஃபின்டன் சோஃபியா
99. வெர்ஜின் சகாயராஜ்

**வேம்பார்**
100. மகிழினி

**திண்டுக்கல்**
101. ஜெர்மோன்
102. மரியமதலேன்
103. ரோசாலி

**திருச்சி**
104. மோனிக்கா கிறிஸ்டி
105. ஸ்டெல்லா
106. ஜான்சி ராணி
107. ஆஞ்சலோ

**பட்டுக்கோட்டை**
108. ஆரோக்கியமேரி

**வடக்குத்து**
109. ஹென்றிதாஸ்

**வீரக்குறிச்சி**
110. ரோஸ்மேரி

**துபாய்**
111. வினிஃப்ரட் பிரின்ஸ்டன்





# தூய பனிமய அன்னை பேராலயம்

## தூத்துக்குடி



## பெருவிழா ஆயத்த 30 நாள் தொடர் பரிந்துரை நற்கருணை ஆராதனை
## பெருவிழா ஆயத்த பரிந்துரை மன்றாட்டுகள் 2021

1. அன்புத் தந்தையே இறைவா, இந்த ஆண்டு பனிமய அன்னையின் பெருவிழாவை நாங்கள் எப்படிக் கொண்டாட வேண்டுமென்று நீர் விரும்புகிறீரோ, அவ்வாறே உமது திருவுளத்தின்படி நாங்கள் கொண்டாட வழிகாட்டும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. ஆசிகளின் ஊற்றே இறைவா, பெருவிழாநாள்களில் அன்னையைத் தரிசிக்க பேராலயம் வர இயலாத அன்னையின் பிள்ளைகள் அனைவரையும் நீர் ஆசிர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாத்துப் பராமரிக்கும் இறைவா, பெருவிழா நாள்களில் பேராலயம் வரவிருக்கிற ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவியர், இறைமக்களைப் பாதுகாத்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. நலன்களின் தந்தையே இறைவா, பேராலய உபகாரிகள், நன்கொடையாளர்கள், தொண்டர்கள், பெருவிழாவுக்கு உதவிசெய்யும் அதிகாரிகள், ஊழியர்கள், மக்கள் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
5. இயற்கையில் உறைந்திடும் இறைவா, பெருவிழா நாள்களில் எங்களுக்கு நல்ல காலச் சூழலைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
6. ஆற்றலின் ஊற்றான இறைவா, அன்னையின் பெருவிழாவை நாங்கள் உள்ளார்ந்த சிறப்புடன் கொண்டாடத் தடையாய் இருக்கின்ற அனைத்துத் தடைகளையும் தூய ஆவியாரின் வல்லமையால் தகர்க்கவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
7. தெய்வீக மருத்துவரே இறைவா, பனிமயத் தாயின் வல்லமைமிக்க பரிந்துரையால் கொரோனா பெருந்தொற்றிலிருந்து நாங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
8. நன்மையின் ஊற்றான கடவுளே, ஊரடங்கின் காரணமாகப் பொருளாதாரச் சிக்கல்களைச் சந்திக்கின்ற குடும்பங்கள், தொழிலகங்கள், தனிநபர்களை ஆசீர்வதித்து, அவர்களுக்கு அருள்செல்வத்தையும்,பொருள்செல்வத்தையும் வழங்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
9. நம்பிக்கையின் ஊற்றான கடவுளே, பேராலயம் வந்து வழிபாடுகளில் கலந்துகொள்ள இயலாத இந்தநாள்களில் எங்களின் இறைநம்பிக்கையையும், ஆன்மீகத்தையும் ஆழப்படுத்த வேண்டுமென்றும், நாங்கள் இல்லங்களிலேயே உம்மை வழிபட்டு, உம்மோடு இணைந்திருக்கும் வரம் தரவேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
10. மகிழ்ச்சியின் நாயகனே இறைவா, இந்தத் தொடர் பரிந்துரை மன்றாட்டில் கலந்துகொள்ளும் அனைவரையும் விண்ணக, மண்ணகக் கொடைகளால் நிரப்ப வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.





# பனிமய நேரலை - 2021

தூய பனிமய அன்னை பெருவிழா நாள்களின்போது தினமும் மாலை 04.30 முதல் 05.30 வரை சூர்யா தொலைக்காட்சியில் நேரலை நிகழ்வுகள் ஒளிபரப்பப்படும்.

1. **பனிமயப் பாக்கள் :** பனிமயத் தாயின் புகழ் பாடும் பாடல்கள் ஒளிபரப்பப்படும்.

2. **பனிமய சாட்சியங்கள் : (காணொளிப் பகிர்வு 1) :** பனிமய அன்னையின் பிள்ளைகள் பகிரும் சாட்சியங்கள் வீடியோ காணொளியாக ஒளிபரப்பப்படும்.

3. **"மாதாவின் செல்லப் பிள்ளைகள்"** : பதினைந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் தங்களுக்குப் பிடித்தமான மாதா பாடலை வீடியோவில் பாடி வாட்ஸ் அப் எண்ணுக்கு (9791529877– அருள்பணி. விமல்ஜன் – உதவிப் பங்குத் தந்தை) அனுப்பி வையுங்கள்.

4. **உங்களுக்குத் தெரியுமா? போட்டி (வாட்ஸ் அப் நேரலை) :** மரியன்னை தொடர்பான கேள்விகளுக்கு உடனே உங்கள் வாட்ஸ் அப் வாய்ஸ் மெசேஜ் வழியாகப் பதில் சொல்லுங்கள். உங்கள் பெயர், பங்கின் பெயரையும் சேர்த்துச் சொல்லுங்கள்.

5. **மரியன்னையின் மேன்மைகள் (காணொளிப் பகிர்வு 2) :** காணொளி வழியாக மரியன்னை பற்றிய குறும்பகிர்வுகள் உங்களை வந்தடையும். அருள்பணி. எம்.ஏ. ஜோ சே.ச., (திருச்சி), அருள்பணி. ரூபஸ் சே.ச. (கருமாத்தூர்), அருள்பணி. அமலன் க.ச. (கோயம்புத்தூர்), அருள்பணி. டெரன்ஸ் (பாளையங்கோட்டை), அருள்பணி. இரத்னராஜ் (பெர்த், ஆஸ்திரேலியா), அருள்பணி. ஆல்பர்ட் (திருச்சி), அருள்சகோதரி டெக்லா ம.ஊ.ச. (பணகுடி) ஆகியோர் மரியன்னையின் மேன்மைகளைப் பகிர்ந்து கொள்வர்.

6. **மறையுரையில் என்னைக் கவர்ந்த கருத்து :** ஒவ்வொரு நாளும் பிற்பகல் மறையுரையைக் (தேர்ஸ்) கேட்பவர்கள், அதில் உங்களுக்குப் பிடித்தமான ஒரு கருத்தை வாட்ஸ் அப் வாய்ஸ் மெசேஜ் வழியாகப் வாட்ஸ் அப் எண்ணுக்கு (9791529877– அருள்பணி. விமல்ஜன் – உதவிப் பங்குத் தந்தை) அனுப்பி வையுங்கள். பகிர்ந்துகொள்ளுங்கள். உங்கள் பெயர், பங்கின் பெயரையும் மறவாது சேர்த்துச் சொல்லுங்கள்.

7. **கடல் கடந்து சென்றாலும் (காணொளிப் பகிர்வு 3) :** வெளிநாடுகளிலுள்ள பனிமய அன்னையின் பிள்ளைகள் தங்கள் அனுபவங்களைச் சுருக்கமாக காணொளி வழியாகப் பகிர்ந்துகொள்வர்.

8. **மலரும் நினைவுகள் :** மக்கள் பங்கேற்பின்றி மாதாவின் பெருவிழாவைக் கொண்டாடும் இந்த ஆண்டில் கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற கொடியேற்ற விழா, நற்கருணைப் பவனி, மாலை ஆராதனை, பெருவிழாத் திருப்பலி ஆகியவற்றின் சிறிய காணொளிக் காட்சிகளைக் கண்டு மனம் மகிழலாம்.

9. **இர்வினுடன் "என்னைக் கவர்ந்த மாதா பாடல்" :** விஜய் தொலைக்காட்சியின் "சூப்பர் சிங்கர்" புகழ் இர்வின் விக்டோரியா உங்கள் மனங் கவர்ந்த மாதா பாடல்களை உங்களுக்காகப் பாடுவார். இசைக் கலைஞன் சகோ. பிரபாகர் இசைக் கருவி மீட்டுவார்.

10. **நேற்று இன்று நாளை :** பெருவிழா நிகழ்வுகள் பற்றிய அறிவிப்புகள், நினைவூட்டல்கள், பாராட்டுகள் இடம்பெறும்.





# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 24)

## ஜூலை - 2021

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி விமல்ஜன் | 9791529877 |
| களப் பணியாளர் | : | சகோதரர் மனோஜ் | 9385646923 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை 5.00, 6.30, 8.00 | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை 9.30 | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை 5.30 | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை 6.30 | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் மாலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ பனிமய மாணவர் கூட்டம் : ஞாயிறு காலை 11.30 - 12.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ பரிந்துரை மன்றாட்டு : திங்கள் மாலை 06.15 - 06.45
- ✓ விவிலியப் பாசறை : ஞாயிறு மாலை 03.00 - 05.00
  செவ்வாய் மாலை 06.15 - 08.15
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ புதுநன்மை அருள்சாதனம் : 01.08.2021
- ✓ உறுதிப்பூசுதல் அருள்சாதனம் : 28.11.2021
  பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.00 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.



## பனிமயச் சுவடுகள்

### (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

237. கடந்த **25.04.2021 ஞாயிறு** முதல் கொரோனாப் பெருந்தொற்று ஊரடங்கை முன்னிட்டுப் பேராலயத்தில் **பொது வழிபாடுகள் நடைபெறவில்லை**. அதிகாலையில் அருள்பணியாளர்கள், துறவியருக்கான தனித் திருப்பலி மட்டும் நடைபெற்றது. திருப்பலி யின்றி அடக்கம் செய்யப்பட்ட ஆறு ஆன்மாக்களின் இளைப்பாற்றிக்காக சிறப்புத் திருப்பலிகள் நடத்தப்பட்டு 20 பேர் கொண்ட உறவினர்கள் மட்டும் கலந்துகொண்டனர்.

238. கொரோனா நோயாளர்களுக்கான மருந்துகள் வேண்டுமென நமது பேராலயத்துக்கு தூத்துக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து வந்த வேண்டுகோளைத் தொடர்ந்து பேராலயப் பங்கு மக்களும், இதர பங்கு மக்களும் காணிக்கையாகத் தந்த **ஓர் இலட்சம் ரூபாய்** (ரூ. 1,00,000) மதிப்புள்ள உயிர் காக்கும் மருந்துப் பொருள்கள் 03.06.2021 அன்று மாண்புமிகு அமைச்சர் கீதா ஜீவன் அவர்கள் முன்னிலையில், தூத்துக்குடி அரசு மருத்துவமனை துறைத் தலைவர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

239. கொரோனா நிவாரணப் பணிகளுக்காகத் தமிழகத் திருச்சபையின் சார்பில் தமிழக முதல்வர் அவர்களிடம் வழங்குவதற்கு நன்கொடை தேவை என்ற மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்களின் வேண்டுகோளின்படி திருத்தலப் பேராலயத்தின் சார்பாக **இரண்டு இலட்சம் ரூபாய்** (ரூ. 2,00,000) வழங்கப்பட்டு, தமிழகத் திருச்சபையின் சார்பாக இரண்டு கோடியே மூன்று இலட்சம் ரூபாய் தமிழக முதல்வர் அவர்களிடம் 08.06.2021 அன்று வழங்கப்பட்டது.

240. கொரோனா பொது முடக்கத்தை முன்னிட்டு நமது பங்கின் **150 நலிந்த குடும்பங்களுக்கு** ரூ. 1,20, 000 மதிப்புள்ள உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, இன்னும் 30 குடும்பங்களுக்கு ரூ. 500 மதிப்புள்ள அரிசிப் பைகள் வழங்கப்பட்டன. இதனைப் பனிமய அன்னைக்குக் காணிக்கையாக வழங்கிய நமது பங்கு மகன் **திரு. ரெக்ஸ் மோத்தா** (ஆஸ்திரேலியா) நமது பங்கு மகனைப் பனிமய அன்னை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

241. பங்கு மக்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, கொரோனா உயிர்க்கொல்லியிடமிருந்து பாதுகாக்கப்படுவதற்காக **தூய பனிமய அன்னையின் திருவுருவம்** நமது பங்கின் தெருக்கள் வழியாக 05.06.2021 முதல் சனி அன்று பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது.

242. ஜூன் மாத **முதற் சனி**யாகிய **05.06.2021** அன்று மரியன்னைக்குப் புகழ்மாலை, முதற் சனி நவநாள், மறையுரை, நற்கருணை ஆசீர் ஆகியன நடத்தப்பட்டு, மாலை 06.30 மணிக்கு சூர்யா தொலைக்காட்சியிலும், பேராலய இணைய தள யூ ட்யூப் சேனலிலும் ஒளிபரப்பப் பட்டது.

243. கிறிஸ்துவின் தூய **திருவுடல், திருஇரத்தப் பெருவிழா**வான 06.06.2021 அன்று மக்கள் பங்கேற்பின்றி நடைபெற்ற பெருவிழாத் திருப்பலி காலை 08.30 மணிக்கு சூர்யா தொலைக்காட்சியிலும், பேராலய இணைய தள யூ ட்யூப் சேனலிலும் ஒளிபரப்பப்பட்டது. அன்று நண்பகல் 12.00 முதல் 01.00 வரை பேராலயத்தில் அருள்சகோதரிகளுடன் இணைந்து நற்கருணை ஆராதனை நடத்தப்பட்டு, பங்கு மக்களுக்காகவும், கோவிட் 19 நோயினால் பாதிக்கப்பட்டோருக்காகவும் மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன.

244. தூய பனிமய அன்னையின் அற்புதத் **திருச்சுருபம்** தூத்துக்குடி வந்துசேர்ந்த 466ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு 09.06.2021 புதன் அன்று பேராலயத்தில் மக்கள்





பங்கேற்பின்றி அருள்சகோதரிகளுடன் இணைந்து சிறப்புப் பாடற் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அன்னையின் அற்புதச் சுருபம் பற்றிய 5 நிமிட காணொளி ஒன்று சூர்யா தொலைக்காட்சியிலும், ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும் ஒளிபரப்பப்பட்டது.

245. பதுவைப் புனிதரான புனித **அந்தோனியார்** திருவிழாவை முன்னிட்டு நமது பங்கிலுள்ள அந்தோனியார் சிற்றாலயத்தில் மக்கள் பங்கேற்பின்றி நடைபெற்ற திருவிழாத் திருப்பலி 13.06.2021 ஞாயிறு அன்று காலை 08.30 மணிக்கு சூர்யா தொலைக்காட்சியிலும், ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும் ஒளிபரப்பப்பட்டது.

246. தமிழக அரசு அறிவித்த **இரு வாரப் பொது முடக்கம்** மேலும் மூன்று வாரங்களுக்கு (25.05.2021 முதல் 14.06.2021 வரை) நீட்டிக்கப்பட்டதால் பேராலய அலுவலகமும், திருப்பொருள் விற்பனையகமும் மூடப்பட்டிருந்தன. பங்கு மக்கள் தந்த திருப்பலிக் கருத்துகள் பங்குத் தந்தையால் கட்டணமின்றி நிறைவேற்றப்பட்டன.

247. ஜூன் மாத **மூன்றாம் சனி சிறப்பு வழிபாடு (8)** 19.06.2021 சனி அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. "மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக" என்னும் கருத்துக்காக மக்கள் பங்கேற்பின்றி நடைபெற்ற இந்தப் பரிந்துரை வழிபாட்டில் அடைக்கல அன்னை அவை அருள்சகோதரிகளும், பாடகர் குழுவினரும் மட்டுமே கலந்துகொண்டனர்.

248. பனிமய அன்னைப் பெருவிழா தொடர்பில் கலந்தாய்வு செய்வதற்காக பங்கு மேய்ப்புப் பணிக்குழுவின் செயற்குழுக் கூட்டம் 22.06.2021 செவ்வாய் அன்றும், பொதுக்குழுக் கூட்டம் 25.06.2021 வெள்ளி அன்றும் நடைபெற்றன.

249. சந்த மரிய தஸ்நேவிஸ் மாதா பெருவிழாவுக்கான முப்பது நாள் (25.06.2021 வெள்ளி முதல் 24.07.2021 சனி வரை) **தொடர் பரிந்துரை ஆராதனை** தொடங்கப்பட்டுள்ளது.

250. தமிழக அரசின் ஊரடங்கத் தளர்வுகளை அடுத்து 21.06.2021 திங்கள் முதல் பேராலயப் பங்கு அலுவலகமும், திருப்பொருள் விற்பனையகமும் நாள் முழுவதும் இயங்கத் தொடங்கின. பேராலயமும் இறைமக்களின் தனிச் சந்திப்புக்காக நாள் முழுவதும் திறந்துவைக்கப்பட்டது.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 68. | டியான்ட்ரா | அகஸ்டின் சாம்ராஜ் நிவேதா | 26-06-2021 | தஸ்நேவிஸ்மாதா |



### *செபிக்கின்றோம்*

### 2. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | கணவர் / மனைவி | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 96. | குரூஸ் ஜெரால்ட் | சௌந்தரம்மாள் | 13-06-21 | இராயப்பர் |
| 97. | பாத்திமா | சூசையா | 16-06-21 | திருச்சிலுவை |



## வழியனுப்புகிறோம்

- நமது பங்கிலுள்ள சவேரியானா இயேசு சபை இல்லத் தலைவர் அருள்பணி. **இஞ்ஞாசி** சே.ச., அருள்பணி. **இக்னேஷியஸ்** மற்றும் அருள்பணி. **சேல்ஸ்** மூவரும் மாற்றலாகி முறையே மதுரை, திண்டுக்கல், ஓரியூர் இல்லங்களுக்குச் சென்றுள்ளார்கள்.
- அடைக்கல அன்னை அவையைச் சேர்ந்த அருள்சகோதரி **சூசம்மாள்**, அருள்சகோ. **இன்ஃபன்டா** இருவரும் மாற்றலாகிச் சென்றுள்ளனர்.
- தெலசால் துறவற அவையைச் சேர்ந்த இல்லத் தலைவர் அருள்சகோ. **சேவியர்** மாற்றலாகி தூத்துக்குடி மங்கலகிரி இல்லம் சென்றுள்ளார்கள்.
- பனிமயத் தாயின் ஆசீர் இவர்களோடு இருப்பதாக!

## வரவேற்கிறோம்

- நமது பங்கிலுள்ள சவேரியானா இயேசு சபை இல்லத் தலைவராக அருள்பணி. **ஆரோக்கியசாமி** சே.ச. அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்கள். அருள்பணி. **அகஸ்டின்** புதிய உறுப்பினராக வந்துள்ளார்கள்.
- அடைக்கல அன்னை இல்லத்துக்கு அருள்சகோ. **மெய்சி,** அருள்சகோ. **ரோசம்மாள்** இருவரும் வந்துள்ளனர்.
- தெ லசால் துறவற இல்லத்திற்கு அருள்சகோ. **ஆரோக்கியதாஸ்** வந்துள்ளார்கள்.
- இவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம். பனிமயத் தாயின் ஆசீர் இவர்களோடு இருப்பதாக!



உதவிப் பங்குத் தந்தை அருள்பணி. **விமல்ஜன்**





களப் பணியாளர் சகோ. **மனோஜ்**



## பங்கில் நிகழவிருப்பவை

- ஜூலை மாத முதல் சனி சிறப்பு வழிபாடும் நற்கருணை ஆசீரும் 03.07.2021 அன்று நடைபெறும். மக்கள் பங்கேற்புடன் நடைபெறுமா, அல்லது பங்கேற்பின்றி நடைபெறுமா என்பது அரசின் அறிவிப்பைத் தொடர்ந்து முடிவு செய்யப்படும். மக்கள் பங்கேற்பின்றி நடந்தால், இந்நிகழ்வுகள் சூர்யா தொலைக்காட்சியிலும், ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும் ஒளிபரப்பப்படும்.
- 17.07.2021 சனி நண்பகல் 12.00 முதல் 03.00 வரை **மூன்றாம் சனி பரிந்துரை வழிபாடு** (9) "பனிமய அன்னை பெருவிழா ஆசிர்வாதங்களுக்காக" ஒப்புக்கொடுக்கப்படும்.

மாதம் ஒரு மாதா படம் : 22

# பரிந்துரைக்கும் தாய்!





பியோ ராயன்

## பிறப்பு நூற்றாண்டு விழா நினைவஞ்சலி

"ஆண்டவரே நீர் எல்லாவற்றிலும் உம் மக்களை உயர்த்தி மேன்மைப்படுத்தினீர்.
எல்லா நேரங்களிலும் எல்லா இடத்திலும் நீர் அவர்களுக்குத் துணை புரியத் தவறியதில்லை"

# லாசர் அம்மாள் பர்னாந்து



மண்ணில்
25.08.1921

விண்ணில்
13.11.1999

என்றும்

மக்கள், மருமக்கள், பேரன்கள், பேத்திகள்
பூட்டன், பூட்டிகள்

## விண்ணக வாழ்வின்
## முதல் வருட நினைவு அஞ்சலி

01.07.2021



# A. விர்கோ கொரையறா

மண்ணில் உதித்த மலரே! புன்முறுவலின் சொந்தமே
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்தவரே!
உறவுகளின் பாலமே! உன்னத இல்லறத்தின் பந்தமே!
கண்சிமிட்டும் நேரத்தில் மின்னலைப் போல் மறைந்தாயே!
எம் இல்லமும் உள்ளமும்
உம் மறைவால் வெற்றிடமாய்ப் போனதே!

மண்ணில்
26.07.1966

விண்ணில்
01.07.2020

பிரிவால் வருந்தும்

அன்புக் கணவர் : J.B. மெர்வின் பர்னாந்து
மக்கள், மருமக்கள், பேரக்குழந்தைகள்
மற்றும் குடும்பத்தினர்



# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"எளிய மனத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களதே"

(மத்தேயு 5:3)



பிறப்பு
06.11.1940

இறப்பு
16.07.2020

## D. ஜோ மஸ்கரனாஸ்

வாழும்போது யாரையும் வெறுக்கவில்லை நீவிர்
உம் வாழ்க்கை முடிந்தபிறகும் மறக்கவில்லை யாம்
குடும்பம் என்ற சிறிய வட்டத்தில் மட்டும் இயங்கவில்லை உம்மனம்
செல்வத்திலும் எளிமையைக் கண்டு
பிறரையும் நேசித்தது உம் உள்ளம்
கல்வி என்ற அணையா தீப ஒளியைப்
பணிவு கலந்த புன்னகையோடு விடாமுயற்சியுடன்
வறியவர்களின் வாழ்வில் ஏற்றியதை
இறைவன் மறப்பாரோ! அதனால்தான் என்னவோ
நற்கனி தந்த இந்த மரத்தை
விண்ணகத் தோப்பில் சேர்த்துக் கொண்டார் இறைவன்
மண்ணகத் தோப்பில் நற்கனி தந்த மரத்தை

### இழந்து வாடும்

மனைவி : அ. பிராஸ்வெல் மச்சாது

| மக்கள் | மருமக்கள் | பேரன் பேத்திகள் |
|---|---|---|
| வகிதா மஸ்கரனாஸ் | அலெக்ஸ் பர்னாந்து | அ. காலெட் |
| ஹெர்மிட் மஸ்கரனாஸ் | ஜீன் பர்னாந்து | ஹெ. ஜூலியானா, ஹெ. ஜாக்லின் |
| கவிதா மஸ்கரனாஸ் | திலக் பர்னாந்து | தி. ஜோஅன், தி. ஜெஃப்ரி |

மற்றும் குடும்பத்தினர், உற்றார் உறவினர்

76A, ஜார்ஜ் ரோடு, தூத்துக்குடி - 2. 9486919454, 7598370145

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"மகிழ்ச்சியூட்டும் இடத்தில் எனக்கு இடம் கிடைத்தது"

(திபா 15:6)



## P. மைக்கேல் பர்னாந்து

மண்ணில்
09.05.1945

விண்ணில்
28.07.2020

உறவுகளோடு
75 ஆண்டுகள்

இறைவழியில் நடந்து துணிவோடு வாழ்ந்தீர்கள்
உழைப்பு என்னும் எண்ணத்தை வாழ்ந்து காட்டி சென்றீர்கள்.
நினையாத நேரத்தில் இறைவன் உம்மை அழைத்துக் கொண்டார்.
இத்துயரிலிருந்து மீளாமல் தினமும் தவிக்கிறோம்.
இறைவனோடு இருக்கிறீர்கள் என்பது மட்டும் எமது ஆறுதல்.
நினைவெனும் எம் இல்லத்தில் என்றும் நிறைந்திருக்கிறீர்கள்.

*என்றும் உங்கள் நினைவில் வாழும்*

**மனைவி சேசம்மாள் பி. ராயர்**
**மற்றும்**
**மக்கள், மருமக்கள்**
**பேரன் பேத்திகள்**

**திருப்பலி :**
**பரிசுத்த பனிமய மாதா ஆலயம்**
**28.07.2021 புதன்கிழமை**
**காலை 5.45 மணிக்கு**

தூத்துக்குடி

# தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்

ஏழுகடல் துறையோடு எல்லா மக்களினங்களின்
ஏக அடைக்கலத் தாயான
சந்த மரிய தஸ்நேவிஸ் மாதாவின்



## திருவிழா சிறப்பு நிகழ்வுகள்

"இவரே உம் தாய்" (யோவான் 19:27)

| | | | | |
|---|---|---|---|---|
| 25.07.2021 | ஞாயிறு | மாலை | 6.00 மணி | சிறப்பு காணிக்கைப் பவனி |
| 26.07.2021 | திங்கள் | காலை | 7.30 மணி | கூட்டுத் திருப்பலி, கொடியேற்றம் - மேதகு ஆயர் ஸ்டீபன் |
| | | பகல் | 12.00 மணி | மாதாவுக்கு பொன் மகுடம் சூட்டுதல் |
| 01.08.2021 | ஞாயிறு | காலை | 7.30 மணி | புதுநன்மைத் திருப்பலி - மேதகு ஆயர் ஸ்டீபன் |
| | | மாலை | 6.15 மணி | திவ்ய நற்கருணை பவனி - மேதகு ஆயர் ஸ்டீபன் |
| 04.08.2021 | புதன் | இரவு | 7.00 மணி | திருவிழா மாலை ஆராதனை - மேதகு ஆயர் ஸ்டீபன் |
| 05.08.2021 | வியாழன் | காலை | 4.30 மணி | முதல் திருப்பலி |
| | | காலை | 5.30 மணி | 2-ஆம் திருப்பலி - மேதகு ஆயர் நசரேன் |
| | | காலை | 7.30 மணி | 3-ஆம் திருப்பலி - மேதகு ஆயர் ஸ்டீபன் |
| | | காலை | 9.00 மணி | 4-ஆம் திருப்பலி |
| | | காலை | 10.00 மணி | 5-ஆம் திருப்பலி - மேதகு ஆயர் அந்தோனிசாமி |
| | | நண்பகல் | 12.00 மணி | 6-ஆம் திருப்பலி |
| | | மாலை | 3.00 மணி | செபமாலை, அருளிக்க ஆசீர் |
| | | மாலை | 5.30 மணி | 7-ஆம் திருப்பலி |
| | | இரவு | 7.00 மணி | தூய பனிமய அன்னையின் திருவுருவப் பவனி |
| | | இரவு | 10.00 மணி | தூய பனிமய அன்னைக்கு குடும்பங்களை ஒப்புக் கொடுத்தல் |

### நவநாட்களில்

| | | | |
|---|---|---|---|
| காலை | 4.30 மணி | : | செபமாலை – தொடர்ந்து திருப்பலிகள் |
| மாலை | 3.00 மணி | : | செபமாலை, மறையுரை (தேர்ஸ்), அருளிக்க ஆசீர் |
| இரவு | 7.15 மணி | : | செபமாலை, பிரார்த்தனை, நற்கருணை ஆசீர் |

## அன்னையின் பிள்ளைகள் அனைவரையும் அன்புடன் அழைக்கும்

முனைவர் அருள்பணி. குமார் ராஜா, பங்குத்தந்தை
அருட்தந்தையர், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள்

பங்கு மேய்ப்புப் பணிக்குழு
பக்த சபையினர், இறைமக்கள்


தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம், தூத்துக்குடி- 628 001
Ph: 0461-2320854, 2324854 www.snowsbasilica.com



SHINY Ph : 98421 31493